பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத்(எஸ்) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

**அரசு கடித (நிலை) எண்.24, நாள்: 25.02.2014**

அனுப்புநர்
திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.,
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள் /
அரசு முதன்மைச் செயலாளர்கள் / அரசு செயலாளர்கள்,
சென்னை– 600 009.
அனைத்து துறைத் தலைவர்கள்/ மாவட்ட ஆட்சியர்கள்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை–600 003.
கருவூலம் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை – 600 015.

அய்யா/அம்மையீர்,

பொருள்: பணியாளர் – அரசுப் பணியாளர்கள் இடமாற்றம் பொது மாற்றல்கள் 2014–2015 ஆம் ஆண்டு மற்றும் அடுத்து வரும் ஆண்டுகளுக்கும் தொடருதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.10, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 07.01.1994.
2. அரசுக் கடித எண்.23847/எஸ்/1998–1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 5.8.1998.
3. அரசுக் கடித எண்.25192/எஸ்/1999–1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 21.05.1999.
4. அரசுக் கடித எண்.24954/எஸ்/2011–1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 29.09.2011.
5. அரசுக் கடித (நிலை) எண்.63, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 30.04.2012.
6. அரசுக் கடித (நிலை) எண்.23, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 07.03.2013.

*****

பார்வை 1 மற்றும் 2–இல் காணும் அரசாணை மற்றும் கடிதத்தின்படி ஒவ்வொரு ஆண்டின் ஏப்ரல் மாதம் 1 –ஆம் நாள் முதல் மே மாதம் 31 –ஆம் நாள் முடிய உள்ள மாற்றல் காலத்தில் அரசுப் பணியாளர்களின் பொது மாற்றல்கள் நடைபெற வேண்டும். பார்வை மூன்றில் காணும் கடிதத்தில், நிருவாகத் தேவையில்லாத பட்சத்தில் மூன்று ஆண்டுகள் பணி முடித்தவர்கள் என்ற காரணத்தினால் மட்டும் செய்யப்படும் பொது மாற்றல்களுக்கு, அரசின் நிருவாகச் செலவினைக் குறைக்கும் பொருட்டு 1999–ஆம் ஆண்டிற்கு தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டு, பின்னர் இத்தடையாணை 2011–ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது.

2. பார்வை 5–இல் கண்டுள்ள கடிதத்தில், அரசுப் பணியாளர்களின் இடமாற்றம் மற்றும் பொது மாற்றல்களுக்கு விதிக்கப்பட்ட தற்காலிகத் தடையாணையை, 2012–2013 ஆம் ஆண்டிற்கு விலக்கி ஆணை வெளியிடப்பட்டது. பார்வை 6–இல் கண்டுள்ள கடிதத்தில், 2013–2014–ம் ஆண்டிற்கு தொடரலாம் என ஆணை வெளியிடப்பட்டது.

3. தற்போது, அரசுப் பணியாளர்களின் இடமாற்றம் மற்றும் பொது மாற்றல்கள் 2014–2015–ஆம் ஆண்டிற்கு தொடர்வது குறித்து அரசு கவனமுடன் ஆய்வு செய்த பின்னர், இடமாற்றம் மற்றும் பொது மாற்றல்களை 2014–2015–ஆம் ஆண்டு முதற்கொண்டும், அடுத்து வரும் ஆண்டுகளிலும் உரிய மாற்றல் காலங்களில் தொடர்ந்து மேற்கொள்ளலாம் எனவும் முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. மேற்குறிப்பிட்ட ஆணையினைத் தவறாமல் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

ப.2 25/2/2014

அரசு தலைமைச் செயலாளருக்காக.

25/2/14

நகல்:

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின்
அனைத்து அலுவலர்கள் / பிரிவுகள், சென்னை –600 009.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை – 600 009.
நிதித்துறை, சென்னை – 600 009.
மாநில கணக்காயர் I மற்றும் II, சென்னை– 600 018.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை– 600 009/ 79 / 35.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை–600 009.
அமைச்சர் ( நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள்
மற்றும் சிறைச்சாலைகள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்கள்.